நான் தேடும் காதல் நீ......( எபிலாக்)

ஐந்தாண்டுகள் கழித்து,

"தீர்த்தா......."என்று அழைத்தபடி உள்ளே வந்தான் அமரன்.

"இந்தா வந்துட்டாருல்ல உங்க பிள்ளை...."என்று சமையல் கட்டில் அகிலா விடம் கூறிக் கொண்டே வெளியில் வர,அவளை முறைத்தபடி நின்றான் தீரன்.

"என்னடா உன் அப்பாவை ஒண்ணு சொல்லக் கூடாது கோபம் வந்துடுமே உனக்கு.....எல்லா பையனும் அம்மாக்கு சப்போர்ட் பண்ணுவாங்க நீ மட்டும் அப்பா பிள்ளையா இருக்க....."என்று தன்னை முறைக்கும் ஐந்து வயது மகனை தூக்க போக,

"நோம்மா.....நீ தூக்க கூடாது.....பேபிக்கு வலிக்கும்....."என்றவன் தன் தாயின் நிறை மாத வயிற்றில் முத்தம் கொடுக்க, உடல் சிலிர்த்து அடங்கியது தீர்த்தாவிற்கு,

"என் தீரு குட்டிக்கு என்ன வேணும்..."என்று பிள்ளை தூக்கிக் கொண்ட அமரன் தீர்த்தாவின் கன்னத்தை கிள்ளி முத்தமிட,

"அப்பா மாதிரியே நானும் பாப்பாக்கு முத்தம் கொடுத்தேன்..."

"என் செல்லக்குட்டி......"என்று மகனை உச்சி முகர்ந்து முத்தம் கொடுத்தவன்,

"கண்ணா.....எல்லாம் ரெடியாப்பா.....நீ எதுக்கும் டாக்டர் கிட்ட பேசிடேன்....."என்று அகிலா கூற,தீர்த்தா அவரை முறைத்தாள்.அமரன் அவளின் முறைப்பைக் கண்டு கண்களால் கெஞ்ச,

"அங்க என்ன முறைப்பு....முதல்ல சாப்பிட்டு மாத்திரை போடு....."

"போவாம்மா...."என்ற அமரன் தீர்த்தாவை கண்களால் கெஞ்ச,அவளோ முறைத்துக் கொண்டு சென்றாள்.

"என்ன கண்ணா...மாமியார் மருமக சண்டைக்குள் நீ மாட்டிக்கிட்ட போல....இந்தா காபியை குடி முதல்ல ...."என்று கற்பகம் அவனின் கையில் திணிக்க,

"ப்பா தேங்க்ஸ் அத்த...."

"நீ இவங்க இரண்டு பேருகிட்டேயும் பாடுபடறத பார்த்தா எனக்கே கவலையா இருக்கு....."என்ற கற்பகத்திற்கும்,அமரனுக்கும் முதல் குழந்தை பிறப்பு நியாபகம் தான்,தீர்த்தாவிற்கு தீரன் பிறக்கும் போதே கொஞ்சம் கஷ்டப்பட்டுவிட்டாள்.அதிலிருந்தே அகிலா தீர்த்தாவை டீ கடையை அமரனிடம் ஒப்படைத்துவிடும் படி கூற தீர்த்தாவோ முடியவே முடியாது என்று கூறிவிட,அன்றிலிருந்து தொடங்கியது

அகிலாவிற்கும்,தீர்த்தாவிற்கும் உள் நாட்டு சண்டை நடந்து கொண்டிருக்கிறது.இதில் அமரன் தான் மிகவும் அல்லாடி போவான் மனைவிக்கும்,அம்மாவுக்கும் இடையில் கடந்து அல்லாடுகிறான்.

தன் அறைக்குள் நுழைந்த அமரன் தீர்த்தாவை தேட,அவளோ அவர்கள் அறையின் உள்ளே இருந்த குழந்தைகள் அறையில் இருந்தாள்.அந்த அறை உருவாக்கி இரண்டு வாரங்கள் ஆகின்றன,அறையின் உள்ளே குழந்தைக்கான பொம்மைகள்,பிறக்கும் குழந்தைக்கு தேவையான பொருட்கள்,சுவரெங்கும் பொம்மை படங்கள் என்று அந்த இடமே சொர்கலோகம் போல இருந்தது.

"ஓய் பொண்டாட்டி......இங்க என்ன பண்ணிக்கிட்டு இருக்க...."என்று கேட்க,

"ம்ம் ஒண்ணுமில்ல இதை எப்ப கோர்ப்பீங்க...."என்று குழந்தைக்காக புதிதாக வாங்கியிருந்த தொட்டிலை கேட்க,அமரனோ அவளை பின் பக்கமாக அணைத்து,

"ஓய்....என்ன கோபம்...."என்று கேட்க,அவளோ அமைதியாக இருக்க,

"உனக்கு தெரிஞ்சே கேட்டா நான் என்ன பண்றது...."என்றவளின் குரலே இன்று சற்று உள்ளடங்கி இருந்தது.அவளை தன் புறம் திருப்பிய அமரன் தன் இரு கைகளுக்குள் முகத்தை வைத்துக் கொண்டு,

"அம்மா பத்தி உனக்கு தெரியாதா....அவங்க உனக்காக தான் பயப்படுறாங்க...."

"தெரியும்....ஆனா கடையை என்னால விடமுடியாது....உங்க அம்மா இன்னைக்கும் என்கிட்ட சண்டை ...."

"நீயும் சண்டை போட்ட அதான...."

"ம்ம்...."என்றவளுக்கு உள்ளுக்குள் கோபம் தான் அகிலாவின் மீது அவளின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த அமரனுக்கு அவளின் மனநிலை நன்கு புரிந்தது.தீர்த்தாவிற்கு கடை எவ்வளவு முக்கியம் என்று தெரியும்,

"தீரூ....எனக்கு நீயும் முக்கியம்...."

"ம்ம் தெரியும் விடுங்க..."என்றவளின் இரண்டு கன்னங்களிலும் முத்ததை பதிக்க ஆரம்பித்து நெற்றி,கண் என்று கொஞ்சம் கொஞ்சமாக முன்னேற,

"அமரா..."என்றவளின் குரலே கிசு கிசுப்பாக வர,

"ம்ம்..."என்றவனின் இதழ் ஒற்றல்கள் குறையவில்லை மெல்ல நகர்ந்து அவளின் இதழ்களில் இளைப்பாற தொடங்க,தீர்த்தா அவனின் இளைப்பாறலில் துவண்டு தான் போனாள்.மனைவியின் உடல்நிலையை கருத்தில் கொண்டு அவளைவிட்டவன்,

"எதுக்கும் பாப்பா பிறக்குற வரைக்கும் தள்ளியே இருடீ..."என்று கூற தீர்த்தா பதில்  பேசும் நிலையில் இல்லை சிறிது நேரம் எடுத்தது அவள் மீண்டும் பழைய நிலைக்கு வருவதற்கு,

"உன்னை...."என்று அவனின் கழுத்தை பிடிக்க போக,அமரனின் முகத்தில் வற்றாத புன்னகை.

"சிரிக்காத....நாளைக்கு சிவாவை வீட்டுக்கு கூட்டிட்டு  வரனும்..."

"உன் தங்கச்சி வரமாட்டா...அவளே வரேன்னு ஒத்துக்கிட்டாலும் கதிர் அவளை அனுப்ப மாட்டான்...."

"கட்டிக்கவே யோசிச்சான்....."

"அது அப்ப கல்யாணத்துக்கு முன்னாடி.....இது இப்ப கல்யாணத்துக்கு அப்புறம்...."

"பேசிக்கிறேன் அவன் கிட்ட....."என்று தீர்த்தா பல்லை கடிக்க,

"ச்சு....இங்கபாரு இப்ப நீ டென்ஷன் ஆகாத...."என்று கூறிக் கொண்டிருக்க,

"அப்பா...."என்று அழைத்தபடி தீரன் வர,

"மூக்கு வேர்த்துடும் உங்க பிள்ளைக்கு....."என்றுவிட்டு முகத்தை திருப்பிக் கொள்ள,

"ஏய் அவன் நம்ம பிள்ளைடீ....."என்று அமரன் கூற,

"என்னை உன் கிட்ட நெருங்க விடமாட்டேங்குறான்...."என்று குறைபட,அவள் தலையை மெல்ல தட்டிவிட்டு சென்றான்.

தீர்த்தாவிற்கு  இன்னும் நம்பமுடியவில்லை தான் இது இந்த வாழ்க்கை இது எப்படி எனக்கு கிடைத்தது என்று நினைத்து பார்த்தவளுக்கு விடை தான் கிடைக்கவில்லை.அதோடு அமரனின் காதல் அவளை அத்தனை மாற்றியிருந்தது.இவனுக்கு காதலிக்க தெரியுமா என்று நினைத்திருந்தவளின் நினைப்பை பொய்யாக்கி தினம் தினம் காதல் எப்படி இருக்கும் என்று காட்டிக்கொண்டிருக்கிறான்.

&&&&&&&&&&&&&&&&

"சிவாம்மா.....இன்னும் கொஞ்சம் சாப்பிடும்மா....."என்று கதிர் சிவன்யாவின் பின்னே அலைந்து கொண்டிருந்தான்.

"போதும் என்னால முடியலை...."என்றவள் வயிற்றை பிடித்துக் கொண்டு அமர்ந்துவிட,

"கதிரண்ணா.....அண்ணியை பாடாபடுத்திட்டுக்கிட்டு இருக்கு என்று ஆர்த்தி கூற,

"அதுக்கு தான் அண்ணி நீங்க உங்க வீட்டுக்கு போங்க...."என்று சரவணன் கூற,

"டேய் போங்கடா அந்த பக்கம்....சிவாம்மா...நீ இங்கேயே இரும்மா நான் உன்னை பார்த்துக்குறேன்....."என்று கதிர் கூற,அவனை முறைத்த சிவன்யா,

"வேலைக்கு கிளம்புங்க...டையம் ஆச்சு...."என்றவள் தங்கள் அறைக்குள் நுழைந்து கொண்டாள்.கதிருக்கு வருத்தமாகி போனது சிவன்யா தன் காதலை கூறிய போதும் சரி அமரனிடம் கூறி திருமணத்திற்கு பேசிய போதும் சரி தான் வேண்டாம் என்று மறுத்தது,அதன் பிறகு பல போராட்டங்கள் நடந்த பிறகு தான் அவர்களின் திருமணம் இதோ ஒருவருடம் முன்பு தான் கதிருக்கு அரசாங்க வேலை கிடைத்த பிறகு தான் நடந்தது.அதனால் சிவன்யா இது போல் அதிக அக்கறை காட்டும் சமயங்களில் முகத்தை தூக்கி வைத்துக் கொள்வாள்.

"ஆர்த்தி...இப்ப பாரேன் அண்ணனும் அண்ணி பின்னாடியே உள்ள போகும்...." என்று சரவணன் கூற,ஆர்த்தி வாய் பொத்தி சிரிக்க,

"என்னை பார்த்தா சிரிப்பா இருக்கு உங்களுக்கு...."என்ற கதிர் சிவன்யாவின் பின் தான் சென்றான்.

&&&&&&&&&&&&&&&

செல்வத்தின் வீட்டில்,

"ம்மா தாமரை...."என்று அழைத்தபடி ராஜங்கம் தன் நாற்காலியை நகட்டிக் கொண்டு வர,

"இங்க இருக்கேன் தாத்தா ....."என்றவளின் குரல் தோட்டத்தலிருந்து வந்தது.அவர் அங்கு செல்ல தாமரையின் இரண்டு வயது மகன் சரண் விளையாடிக் கொண்டிருந்தான்.

"அடடே குட்டி இங்க தான் இருக்கானா..."என்று கேட்க,

"தாத்தா...."என்று அவரின் கால்களை கட்டிக் கொண்டவனை வாஞ்சையாக தடவியவர்,

"என் செல்லம்....எங்க என் பெரிய செல்லம்..."என்று பேத்தி கார்த்திகாவை கேட்க,

"க்கா ஸ்கூல் போயிருக்கா..."என்று சின்னவன் கூற,

"தாத்தா மாத்திரை போட்டீங்களா..."என்று தாமரை கேட்க,

"நீ வந்ததுக்கு அப்புறம் எல்லாம் சரியா இருக்குமா....நான் நல்லா இருக்கேன்....."என்றவரின் முகத்தில் தான் அத்தனை பொலிவு.ஆம் தாமரை வந்த பிறகு வீட்டு நிர்வாகம் முழுவதும் அவள் தான்

பார்க்கிறாள்.சாருலதாவை ஓரம் கட்டிவிட்டாள் உங்கள் விருப்படி நீங்கள் இருங்கள் வீட்டை என்னிடம் ஒப்படைத்துவிடுங்கள் என்றுவிட,சாருவிற்கு தன் வேலை கேடாத வரை லாபம் என்று நினைத்து அவரும் விட்டுவிட இதோ அனைத்தும் தாமரையின் கையில் தான்.செல்வமும் தாமரையின் பொறுமையான அனுகுமுறையில் ஈர்க்கப்பட்டுவிட்டார்.ஆக தாமரை தன் வாழ்வை அந்த இடத்துக்கு தக்கது போல மாற்றி அமைத்துக் கொண்டாள்.இப்போதும் தன் தாய் வீட்டிம் தள்ளி தான் நிற்கிறாள் அவர்களும் அவளை அவள் போக்கில் விட்டுவிட்டனர்.

&&&&&&&&&&&&&&

"அமரா....."என்ற தீர்த்தாவின் குரல் அந்த பிரசவ அறை எங்கு ஒலிக்க,அமரனோ கைகளை பிசைந்தபடி வெளியில் நின்று கொண்டிருந்தான்.முகம் வெளுத்து போய் நிற்க அகிலாவிற்கு தான் கோபமாக இருந்தது,

"சொன்னா கேட்குறாளா....பாருங்க அண்ணி....இவளால என் பிள்ளை என்ன பாடு படறான்...."என்று ஆரம்பிக்க,

"ச்சு அகி விடு அதான் சரியான நேரத்துக்கு கண்ணா வந்துட்டான்ல...."என்றவருக்கும் கோபம் தான் இன்னும் இரண்டு வாரங்கள் இருக்குகிறது பிரசவத்திற்கு இவள் கடை வேலை என்றதில் பனிக்குடம் உடைந்தவிட்டது.நல்லவேளை அமரன் மண்டியில் இருந்ததால் உடனடியாக மருத்துவமனை அழைத்து வந்தாகிற்று இல்லை என்றால் நினைத்து பார்க்கவே பயமாக தான் இருக்கிறது.இதோ சில மணிநேர போரட்டத்திற்கு பிறகு அமரனின் மகள் இந்த உலகிற்கு பிறக்க,மகளை தூக்கி உச்சி முகர்ந்தவனுக்குள் அத்தனை நிறைவு.தான் தேடும் காதல் எது என்று அவரவர் உணர்ந்து அதில் இன்பமாக வாழ்வை வழிநடத்தியும் செல்கின்றனர்.

அமரன் தேடிய காதல் தீர்த்தா.சிவன்யா தேடிய காதல் கதிர்.தாமரை தேடிய காதல் நிமலன்.

(சுபம்)